பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 04 2024 **SUNDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்து வருகிறது.

2. தமிழகத்தின் நலன்களுக்கும், கலாச்சாரத்திற்கும் பிஜேபி முன்னுரிமை அளித்து வருவதாக அக்கட்சியின் தலைவர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

3. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க பிஜேபி தவறிவிட்டதாக திமுக கூறியுள்ளது.

4. திமுக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் மாநிலம் முழுவதும் இன்று நடைபெற்றன.

6. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி வெற்றிபெற 235 ரன் என்ற இலக்கினை மும்பை அணி நிர்ணயித்துள்ளது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* -

<<<<<>>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்து வருகிறது.

இதையடுத்து, அரசியல் கட்சித்தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, கரூர், அரியலூர் உள்ளிட்ட பகுதிகளில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், காசி தமிழ் சங்கமம் நடத்தி காசிக்கும் - தமிழகத்திற்கும் இடையே தங்கள் கட்சி இணைப்பை ஏற்படுத்தியதாக கூறினார்.

தமிழகத்தின் நலன்களுக்கும், கலாச்சாரத்திற்கும் தாங்கள் முன்னுரிமை அளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

உற்பத்தித்துறையில் கடந்த பத்தாண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு சாதனை படைத்துள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகள், பழங்குடியினர், ஷெட்யூல்டு வகுப்பினர் உள்ளிட்ட அனைத்துத்தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல திட்டங்கள் தமிழகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் திரு ஜெ பி நட்டா கூறினார்.

சேலத்தை அடுத்த ஓமலூரில் பிரச்சாரம் மேற்கொண்ட திமுக-வின் திரு உதயநிதி ஸ்டாலின், பிஜேபி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கான நிதியை அக்கட்சி தமிழகத்திற்கு ஒதுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் எயிம்ஸ் மருத்துவமனையை கட்டுவதற்கான முயற்சி எதையும் கடந்த பத்தாண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை திமுக செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களுக்கான நலத்திட்டங்கள் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

அஇஅதிமுக சார்பில் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு நத்தம் விஸ்வநாதன், திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரில் வாக்கு சேகரித்தார்.

அப்போது பேசிய அவர், தமிழகத்தில் தற்போது ஆட்சியில் உள்ள திமுக மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தவில்லை என்று கூறினார்.

ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளை அக்கட்சி நிறைவேற்றவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

கடந்த பத்தாண்டுகள் மத்தியில் ஆட்சி செய்த பிஜேபி தலைமையிலான அரசு பெட்ரோல், டீசல் விலையும், அத்தியாவசியப்பொருட்களின் விலையும் உயர்வதற்கு காரணமாக இருந்ததாக குற்றம் சாட்டினார்.

மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் அஇஅதிமுக செயல்பட்டு வருவதாகவும் திரு நந்தம் விஸ்வநாதன் கூறினார்.

விருதுநகரில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு மாணிக்கம் தாக்கூர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

சிவகாசி வெம்பக்கோட்டை பகுதிகளில் மக்களை சந்தித்து பேசிய அவர், பிஜேபி செல்வந்தர்களுக்கு துணைபோகும் கட்சியாக உள்ளது என்று கூறினார்.

பட்டாசு தொழிலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை தங்கள் கூட்டணி மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

தங்கள் கட்சி தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றும் என்றும் திரு மாணிக்கம் தாக்கூர் கூறினார்.

மன்னார்குடியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு ஜி. ராமகிருஷ்ணன், வங்கி நடைமுறை சட்டம் போன்ற சட்டங்களை கொண்டுவந்து பிஜேபி லாபம் அடைந்ததாக கூறினார்.

தேர்தல் நேரத்தில் எதிர்க்கட்சிகளின் வங்கிக்கணக்குகளை முடக்குவது போன்ற செயல்களில் அக்கட்சி ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டினார்.

குடியுரிமை திருத்தச்சட்டம், கஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த சட்டத்தை ரத்து செய்தது, போன்றவற்றை நிறைவேற்றுவதற்கு அஇஅதிமுக ஆதரவு அளித்ததாகவும் திரு ராமகிருஷ்ணன் கூறினார்.

**<<<<<>>>>>**

இனி தேர்தல் களம்,

(**MUSIC-7 sec.)**

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது பொள்ளாச்சி மக்களவைத் தொகுதி

*(வாய்ஸ் பைட் - ஹரிஹரன் – 95 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தமிழகத்தில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் அனைத்து மாவட்டங்களிலும் இன்று நடைபெற்றது.

சென்னையில் 16 மையங்களில் இப்பயிற்சி நடைபெற்றது.

திருவான்மியூர், நந்தனம், ஆயிரம் விளக்கு, ஆகிய பகுதிகளில் நடைபெற்ற இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பினை சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான திரு ஜெ. ராதாகிருஷ்ணன் இன்று ஆய்வு செய்தார்.

பின்னர், மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் விழிப்புணர்வு மணல் சிற்பத்தினையும் அவர் பார்வையிட்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் 2-ஆம் கட்ட பயிற்சி வகுப்புகளை காணொலி வாயிலாக மாவட்ட ஆட்சியர் திருமதி உமா இன்று பார்வையிட்டார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் முதன்மை அலுவலர் மற்றும் மூன்று நிலைகளில் வாக்குச்சாவடி அலுவலர்கள் என மொத்தம் நான்கு பேர் பணியாற்றுகின்றனர்.

இம்மாவட்டத்தில் மொத்தம் 7 ஆயிரத்து 816 அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி இன்று அளிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் எட்டு இடங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

இந்த மையங்களை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் திரு ராஜகோபால் சுன்கரா, பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், மாவட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாட்டுப்பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

*<u>(சவுண்ட் பைட் - ராஜகோபால் - 47 — செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நாமக்கல் - கரூர் மாவட்ட எல்லையில் உள்ள வேலூர் சோதனைச்சாவடியில் நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மருத்துவர் உமா, சோதனைச்சாவடி வழியாக வரும் அனைத்து வாகனங்களையும் நேரடியாக ஆய்வு செய்தார்.

-------------

மக்களவைத் தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில், திருவண்ணாமலையில் ராணுவ வீரர்களின் அணிவகுப்பு இன்று நடைபெற்றது.

---------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மாபெரும் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது

-------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 7 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கம், வெள்ளியை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 235 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் தில்லி அணி சற்றுமுன்வரை 11 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 107 ரன் எடுத்துள்ளது.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 234 ரன் எடுத்தது

-------------

இரவு ஏழரை மணிக்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் குஜராத் அணி - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

<<<<<END>>>>>